பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 03 2026 MONDAY 12.40 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகின் மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கல்வித்திட்டத்தை மேம்படுத்த வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. மேற்காசிய நாடுகளில் வசிக்கும் இந்தியர்களை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. இந்தியா – Seychelles இடையேயான கூட்டு ராணுவ பயிற்சி இன்று தொடங்கியது.

4. மத்திய அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கான சேவை முகாம் திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் இன்று தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

5. இந்தியன் Wells Masters சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Yuki Bhambri – சுவீடனின் Andre Goransson இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---இனி விரிவான செய்திகள்-

<<<<<<<>>>>>>

நாட்டின் மருத்துவ கட்டமைப்பு கடந்த சில ஆண்டுகளாக வலுப்பெற்று வருகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அனைவரின் முயற்சியில் - அனைவருக்கான வளர்ச்சி என்ற தொலைநோக்கு பார்வையில் இன்று பட்ஜெட்டுக்கு பிந்தைய காணொலி கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் பட்ஜெட்டாக இது அமைந்துள்ளது என்று கூறினார்.

நாட்டின் ஒட்டுமொத்த சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துவதோடு மட்டுமின்றி, நோய் தடுப்புக்கான சிறப்பானத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் மருத்துவக்கல்லூரிகளின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆயுஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், ஆரோக்கிய மையங்கள் மற்றும் மருத்துவச் சேவைகள் கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகள் குறிப்பாக ஆயுர்வேதா, யோகாசனம் போன்றவை உலக அளவில் விரிவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவ பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர், சிறப்பு மருத்துவ சிகிச்சையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உலகளாவிய தேவை இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

உலகின் மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நாட்டின் கல்வித்திட்டத்தை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு, தானியங்கி தொழில்நுட்பம், மின்னணு பொருளாதார கட்டமைப்பு மற்றும் உலகத்தரத்திற்கான உற்பத்தி ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது என்றும் அவர் கூறினார்.

புதிய கண்டுபிடிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எதிர்காலத்திற்கான தொழில்நுட்பங்களை கொண்டுவருவதற்கான முயற்சிகளை இப்பொழுதே மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர், எதிர்காலத்திற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டிய தேவை உள்ளதாகவும் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சியில், விளையாட்டுத்துறை முக்கிய பங்காற்றி வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு ஊக்குவிப்புத் திட்டங்கள் மூலம், நாடு முழுவதும் விளையாட்டுகளுக்கான கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டு வருவதாகவும், இதனால் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் புதிய எழுச்சியோடு தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

விளையாட்டு கட்டமைப்பை தொடர்ந்து வலுப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்துவருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு இன்று தொடங்கியது.

மாநிலங்களவையில், மேற்காசிய நாடுகளில் நிலவும் சூழ்நிலை குறித்த அறிக்கை ஒன்றை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தாக்கல் செய்தார்.

மேற்காசிய நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தூதரக ரீதியிலான அணுகுமுறையும், சமரச பேச்சு வார்த்தைகளும் மேற்காசிய நாடுகளில் இயல்பு நிலை திரும்புவதற்கு உதவும் என்றும் அவர் கூறினார்.

இவ்வாண்டு ஜனவரி மாதமே ஈரானில் வசிக்கும் இந்தியர்களுக்கு தூதரகம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரையில், தூதரகத்தின் மூலம் அவ்வப்போது அளிக்கப்படும் தகவல்களை கேட்டு அதன்படி செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவிலிருந்து அத்தியாவசியத் தேவையின்றி எவரும் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்புக்கான அமைச்சர்கள் குழு கூட்டத்தில் மேற்காசிய மற்றும் வளைகுடா நாடுகளில் இந்தியர்கள் சந்தித்துவரும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

அங்குள்ள நிலைமைகளை இந்தியா தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்று குறிப்பிட்ட டாக்டர் ஜெய்சங்கர், அந்நாடுகளில் உள்ள இந்தியர்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

பாதுகாப்புக்கான அமைச்சர்கள் குழு கூட்டத்திற்குபின், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கத்தார், சவுதி அரேபியா, ஓமன், ஜோர்டான், இஸ்ரேல், பஹ்ரைன் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பதற்றத்தை தணிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

வளைகுடா நாடுகளில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்கள் வசித்து வருவதாக அவர் கூறினார்.

எரிசக்தி பாதுகாப்பு, எண்ணெய் வளம் ஆகியவற்றில் இந்தியாவின் நெருங்கிய நாடாக வளைகுடா நாடுகள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கப்பல் போக்குவரத்து பணிகளில் அதிக அளவில் இந்தியர்கள் வளைகுடா நாடுகளில் பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

மேற்காசிய மற்றும் வளைகுடா நாடுகளில் பாதுகாப்பு நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

டெஹ்ரானில் பயின்று வரும் இந்திய மாணவர்களை வேறு இடத்தில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை அங்குள்ள இந்திய தூதரகம் மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈரான் நாட்டில் வசித்துவரும் இந்திய தொழில் அதிபர்கள் மற்றும் வர்த்தகர்கள் பாதுகாப்பாக அர்மேனியா வழியாக இந்தியா திரும்புவதற்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

67 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் சர்வதேச எல்லைகளை கடந்து தாயகம் திரும்புவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்காசிய நாடுகளில் உள்ள இந்தியர்களை பத்திரமாக அழைத்து வருவதற்கு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்த அறிக்கையை மக்களவையிலும் டாக்டர் ஜெய்சங்கர் தாக்கல் செய்தார்.

<<<<<<<>>>>>>

இந்தியா – Seychelles இடையேயான 11-ஆவது கூட்டு ராணுவப் பயிற்சி இன்று முதல் வரும் 20-ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக கிழக்கு ஆப்பிரிக்க நாடான ஷெசல்ஸுக்கு இந்திய ராணுவப்படை பிரிவினர் சென்றுள்ளனர்.

இருநாடுகளுக்கும் இடையிலான புலனாய்வு கட்டமைப்பில் ஒத்துழைப்பு, அமைதி நடவடிக்கைகளில் பங்கேற்பு உள்ளிட்டவற்றில் இப்பயிற்சி நடைபெறுகிறது.

இருதரப்பு ராணுவ உறவுகளை மேம்படுத்தவும், வீரர்களின் செயல் திறனை ஊக்குவிக்கவும் இப்பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளையோர் தொடர்பு திட்டத்தை புதுதில்லியில் இளையோர் மற்றும் விளையாட்டு அமைச்சகம் இன்று தொடங்கியுள்ளது.

மேரா யுவ பாரத் இயக்கத்தின்கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இளைஞர்கள் ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் இத்திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

நாடு முழுவதிலும் உள்ள 35 கல்லூரிகளை சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

கலந்துரையாடல் அமர்வுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு இதில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடெங்கிலும் உள்ள 22 மாநிலங்களில் உள்ள 274 பல்கலைக்கழங்கள் தெரிவு செய்யப்பட்டு இத்திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை இளைஞர் நலன் அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது.

இதுவரை மை பாரத் இணையதளத்தில் இத்திட்டத்தில் பங்கேற்க 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பதிவு செய்துள்ளனர்.

<<<<<<<>>>>>>

மத்திய அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கான மூன்று நாள் சேவை முகாம் திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் இன்று தொடங்கியது.

இந்த முகாமில் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதோடு, நலத்திட்டங்களுக்கான சேவைகளை பெறுவதற்கு ஒருங்கிணைந்த சேவை முகாமும் நடைபெறுவதாக தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் இயங்கும், மத்திய மக்கள் தொடர்பகத்தின் சென்னை மண்டல இயக்குநர் திரு காமராஜ் தெரிவித்தார்.

*(Sound Byte – காமராஜ் – 60 Sec.)*

<<<<<<<>>>>>>

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு ஆப்பிரிக்க நாடான மலாவிக்கு ஆயிரம் டன் அரிசியை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், அந்நாட்டில் கடும் வறட்சி நிலவுவதால், உணவுப் பொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், மனிதாபிமான அடிப்படையில் இந்தியா உணவு தானியத்தை அனுப்ப முடிவெடுத்ததாகவும் கூறியுள்ளார்.

வளர்ந்து வரும் நாடுகளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் இந்தியா உதவிக்கரம் நீட்டும் என்றும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

இந்தியன் Wells Masters சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Yuki Bhambri – ஸ்வீடனின் Andre Goransson இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலிபோர்னியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 6-3 என்ற செட் கணக்கில், பிரான்சின் Fabric Martin – நெதர்லாந்தின் David Pel இணையை வென்றது.

<<<<<<<END>>>>>>